www.tamilarangam.net

கலாச்சாரம்

அலை 2 ஆக்கம் 1



RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அட்டையில்.....

வைகறைப் பொழுது
புலர்வுக்கு வருகிறது.

திருவிழாக் கூட்டத்தில்
பாவாடைத் தேர்களில்
பவனி வந்தவர்கள்
ஒரு தேசத்தின்
விடியலின் விழாக்கான
தலைமைகள் தாங்குகின்றார்
தலைகளை தருகின்றார்.

நீள் விழி என்றும்
மான் விழி என்றும்
வார்த்தைச் செதுக்கல்களில்
கரைந்து
காணாமல் போனவர்கள்
இன்று
மழைக்கண் கொண்டு
நிஜ உலகம் வந்தனர்.

தமிழீழ போர்க்களத்தில்
சுழல்கின்ற
சின்னச் சின்னப்
புயல்களையெல்லாம்
பெற்றெடுத்த தென்றல்கள் -
சோகங்களை
தத்தெடுத்த மாதர்கள்.

அடுப்பங் கரைக்குள்
கண்ணீரில் புகைகின்ற
பருவ விறகுகள்.

தலை முட்டும்
கிடுகு வேலி அடைப்புக்குள்
விழியாலே நிலமளந்து
மண்
நோகாமல் நடந்தவர்கள்.

கல்யாண நினைவுகளின்
பெருமூச்சுக் கனவுகளில்
கன்னத்தைக் கீறும்
கண்ணீரைத் துடைத்து
புதிய புலர்வுக்கு
பூபாளம் பாடப் புறப்பட்டவர்கள்.

வெளிக்காற்றுப் படாமல்
மனதுக்குள் புழுங்கி ...
மூச்சு விடவும்
ஆண்வர்க்கங்களின்
அனுமதி கோரி ...
கால் பிடித்து ..
கை பிடித்து ...
படுக்கை அறைகளில்
இயந்திரமாய் ...

(தொடர்ச்சி 21ம் பக்கம்)

www.tamilarangam.net



CENTRE DES ARTS
ET
CULTURE TAMOULS
57 RUE BICHAT, PARIS-10

உயிரை உருக்கும் ... இந்த
இளைய மெழுகுவர்த்திகள்
இலட்சிய நெருப்புக்களின்
கருவறைகள்.
அந்த
மரணிக்காத மரணங்களின்
ஞாபகச் சின்னங்களுக்கு...

www.tamilarangam.net

பார்வை

கலை இலக்கியங்கள் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். நிதர்சன வாழ்க்கையில் பிற்போக்குத் தன்மையான குப்பை கூளங்களைக் களைந்து ஒரு சுதந்திரமான முன்னேற்றமான வாழ்க்கைக்கு வழி வகுப்பதாக அமைய வேண்டும். கலை இலக்கியங்கள் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமாயின் மக்களிடையே உள்ள பிரச்சனைகளையும் அவலங்களையும் இன்ப துன்பங்களையும் எடுத்துக் காட்ட வேண்டும். அதாவது ஒரு மனிதனின் இன்பம், துன்பம், தெளிவு, விழிப்பு என்பனவற்றினால் இன்னொரு மனிதனின் உணர்வைத் தூண்டுவதற்கு கலை இலக்கியமே சிறந்த ஊடகமாக அமைகின்றது. மக்கள் மத்தியில் அநியாயத்தையும், அக்கிரமங்களையும் இழைப்பதன் மூலமே ஒருவர் இன்பத்தை அனுபவிக்கின்றாரெனில் அந்த இன்பத்தை மக்கள் இனங்கொள்ளத் தக்கவகையில் அதனை சித்தரிக்க வேண்டும். மக்களை குறித்த ஒரு இலட்சியத்தின் பொருட்டு ஒன்றிணைக்கும் ஓர் ஆயுதமாக கலை இலக்கியங்களை வடிவமைக்கப்பட வேண்டும்.

சமுகநடத்தைகள் மனிதமூளையில் பிரதிபலிப்பதன் விளைவு கலை இலக்கியமாக உருப்பெற்றபோது மக்களிலிருந்து மக்கள் வாழ்விலிருந்து கலை இலக்கியம் ஓர் வெளிச்சமாக நிற்க மக்கள் அவ் வெளிச்சத்தை நோக்கி அதன் துணையோடும் மேலும் மேலும் முன்னே செல்வார்கள்.

கண்ணீரை மட்டும் காட்டுவதல்ல கடமை அக் கண்ணீரின் ஊற்றைக் காட்ட வேண்டும். அதற்கான காரணகர்த்தாவைக் காட்ட வேண்டும். இதன் மூலம் கண்ணீரை அடைப்பதற்கான பாதை திறக்கப்படவேண்டும், இன்பத்துக்கான ஊற்றைத் திறக்க வேண்டும். இதன் மூலம் மக்களை விறல் மிக்கவர்களாக ஆக்க வேண்டியது ஒவ்வொரு கலை இலக்கியப் படைப்பாளிகளினதும் கடமையாகும். பொதுவாக அரசியல் முன்னெடுப்புகளுடன் இலக்கியப் படைப்புகள் இணைக்கப்படாதவரையில் அவை வெறும் ஒப்பாரியாகவும் களியாட்டமுமாகவே காணப்படும்.

இன்று கலை வளர்க்கின்றோம் என்கின்ற போர்வையில் இந்தியதிரைப்பட கலைஞர்களை வரவழைத்து நடிக நடிகைகளின் அரைகுறை அலங்கரிப்புகளைக் காட்டி காசு பறிப்பதை சுயலாபம் சம்பாதிப்பதை சிலர் இன்னமும் இங்கே தொடர்ந்துகொண்டிருக்கின்றனர். இன்னும் பாடகர்களை வரவழைத்து எதுவிதமான அர்த்தமும் அற்ற வெறும் ஆபாச முக்கல் முனகல் பாடல்களைப் பாடவைக்கின்றனர். இன்னும் சிலர் ஆபாச வீடியோப்படங்களை விநியோகிக்கின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலைச்சாரம் வளர்க்கின்றோம் என்று வாய்கிழியப் பேசிக் கொண்டு பின்புறத்தே மறைவாக இப்படியான பிற்போக்கு சாதனைகளை காட்டிமக்களிடம் காசுபறிப்பவர்கள் இன்றைக்கு வேண்டுமானால் அச்சடித்த நோட்டுக்களை எண்ணிப் பார்த்து சந்தோசப் பட்டுக் கொள்ளலாம். ஆனால் நாளை வருகின்ற தலைமுறைக்கு இவர்கள் என்ன செய்தார்கள்?

இவர்களது இம்மாதிரியான கீழ்த்தரமான நடவடிக்கைகள் மூலம் சமுதாய முன்னேற்ற இலட்சியமற்ற செயற்பாடுகள் மூலம் பணம் பணம் என்று ஒரே குறிக்கோளுடன் அலைகின்ற பிற்போக்கு சிந்தனைகள் மூலம் பாதிக்கப் படுவது ஒரு தனிமனிதனல்ல, ஒரு இனம், ஒரு சமுதாயம்,

எத்தனையோ இடர்களுக்கு மத்தியில் எண்ணற்ற மனித உயிரிழப்புக்களிடையே கோடிக்கணக்கான பொருட்சேதங்களிடையே தமிழீழ விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில் சீரழிந்து சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கும் எமது கலை கலாச்சாரங்களை கட்டிக் காக்க வேண்டியது ஈழத்துத் தமிழர்கள் ஒவ்வொருவரதும் இன்றியமையாத அத்தியாவசிய கடமையாகும். அதே வேளையில் மேற் குறிப்பிட்ட பிற்போக்கு சக்திகளை இனம்கண்டு சமுதாய முன்னேற்றத்துக்கு மாறுபட்ட சமுதாயத்தை பின்னுக்குத் தள்ளுகின்ற வெறும் கேளிக்கைக் களியாட்டக் கூத்துக்களை அப்புறப்படுத்தி இலட்சிய மூச்சுடன் நாம் எல்லோரும் ஒன்றிணைந்து போராடுவதன் மூலமே தமிழினத்தின் இலட்சியத்தை சென்றடைய முடியும்.

பேராசிரியர்

முன்னாள் துணைவேந்தர்
(யாழ். பல்கலைக்கழகம்)

சு. வித்தியானந்தன்

அவர்களுக்கு எமது

அஞ்சலி

தமிழர் கலை கலாச்சார அவை
பிரான்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்ரிபாடா

-மட்டுநகர் செல்வம்-

பலஸ்தீனத்தின் அப்பாவிப் பகுதிகளில் அப்போது ஒர் அசாதாரண நிசப்தம் நிலவியது, புயலுக்கு முன் நிலவும் அமைதியைப் போல. வீடுகளில், அகதி முகாம்களில் கூட ஆளரவம் தென்படாத தோற்றம், போர் கண்ட பூமிபோல் காட்சி தரும் இடிபாடுகள், உடைந்த கட்டிடங்கள், குண்டு குழிகள் அவ்வமைதிக்கு அச்சத்தைச் சேர்த்தன. அப்பகுதிகளில் விடுதலைப்போராட்டக் குழுவினால் ஒரு வாரத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்த வேலைநிறுத்தமும், அதனைத் தொடர்ந்து இஸ்ரேல்அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவுமே இந்த நிச்சலனத்துக்கான காரணங்கள்.

பொய்யான அமைதி திடீரெனக் கலைந்தது அல்லோல கல்லோல — நிலை அங்கு ஆவேசம் கொண்டது. சிறுவர், பெண்கள், முதியவர்அனைவரும் வீதிக்கு ஓடி வந்தனர். நால்வர்ணக் கொடியினை ஏந்தி, வண்ணத்துப் பூச்சிக் கூட்டம்போல் — மொய்த்த சனத்திரளின் வாயிலிருந்து தேசிய கீதப்பாடலும், விடுதலைக்கோஷங்களும் ஒலித்துக்கொண்டிருந்தன. மின்னல் வேகத்தில்தோன்றிய இஸ்ரேலிய கவச வாகனங்கள்மக்களை நோக்கி கடமுடாவென நகர்ந்தன. கலகம் அடக்கும் உடையணிந்து, கைகளில் யூர்சி இயந்திரத் துப்பாக்கிகளுடன், தடதடவெனக்கனத்த பூட்சுகளுடன் ஓடிச்ச[illegible]கள் மேல் இஸ்ரேலியப் படையினர் வேட்டை நாய்களெனப்பாய்ந்தன. துப்பாக்கி அடிக்கட்டைகளும், பற்றன் பொல்லுகளும் வீசிய வீச்சில் மண்டைகள் பிளந்து, எலும்புகள் முறிந்தன. குண்டு வெடிப்புகள், துப்பாக்கி வேட்டொலிகள், கண்ணீர்ப் புகைக்குண்டுகளோடு சனங்களின் ஆரவார ஒலியும், ஆர்ப்பாட்டக் குரலும் வானதிர எழுந்தன. இடையிடையே மரண ஓலங்கள், வேதனைப் புலம்பல்கள், அழுகை யொலிகளுடு சிதறி ஓடும் மக்களின் காலடிச்சத்தங்கள். வாகனங்கள், அம்புலன்சுகள் அலறியவாறு அவ்விடத்தை விட்டு அகலுகின்றன. கண்ணீர்ப்புகை மெல்ல அடங்கி இடம் மீண்டும் வெளித்தது. நடந்து முடிந்த சண்டைக்களம். மீண்டும் மயான அமைதி. புயலுக்குப் பின் நிலவும் அமைதியைப் போல. இதனைத்தான் இன்ரிபாடா என்கின்றூர்கள். அரபு மொழியில் மக்கள் எழுச்சி என்று பொருள்.

காஸா, ஜோர்தானின் மேற்குக் கரை ஆகிய பலஸ்தீனப்பகுதிகளில் தான் விடுதலைக்கான பலஸ்தீன மக்களின் எழுச்சி இடம் — பெற்று வருகிறது. இப்பகுதிகள் 1967ம் ஆண்டு 6 நாள் யோரின்போது இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டன. மத்திய கிழக்கில் பலஸ்தீனத்தில் யூத இனத்துக்கென நாடு ஒன்று உருவாக்கப்பட 1947ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் இல. 181 நிறைவேற்றப்பட்டது. அதன்பிரகாரம் பலஸ்தீனம், யூதப்பகுதி அரபுப்பகுதி என இரண்டாகப்பிரிக்கப்பட்டு இரு அரசுகள் உருவாகவழிவகுக்கப்பட்டது. 1948ம் ஆண்டு இஸ்ரேல் எனும் புதியநாடு பலஸ்தீனத்தின் ஒரு பகுதியில் உருவாகியது. பரந்துபட்ட இஸ்ரேலிய இராட்சியத்தை அமைக்கும் இலட்சியம் கொண்ட யூதரின் சியோனிசக் கொள்கையானது, ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்திற்குப் புறம்பாக பலஸ்தீனத்தின் அரபுப் பகுதிகளையும் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கியது. தொடர்ச்சியான தாக்குதல்கள், இனஅழிப்புப்படுகொலைகள், அடக்குமுறைகள் காரணமாகப் பெருவாரியான பலஸ்தீன மக்கள் தமது தாயகத்தை விட்டு மத்திய கிழக்கிலும், ஆபிரிக்காவிலும் உள்ளஅரபு நாடுகளுக்கு அகதிகளாகவெளியேறினர். உலகில் பலஸ்தீனமக்களின் எண்ணிக்கை 45,00,000. இத்தொகையில் 40% மான அதாவது 17,50,000 பலஸ்தீனியர்களே காஸா, ஜோர்தானின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்குக்கரை ஆகிய தாயகப்பகுதிகளில் வாழுகின்றனர். அகதிமு

காம்களில் அடைக்கப்பட்டு சொல்லொணாத் துன்பங்களுக்கும், அவமானங்களுக்கும், ஒடுக்குமுறைக்கும், உட்பட்டு வாழும் பலஸ்தீனிய மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையையும், தாயக உரிமையையும் அழிக்கும் நோக்குடன் இஸ்ரேலிய அரசு பெருவாரியான யூதக்குடியேற்றங்களை ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்படுத்தி வருகிறது. பலஸ்தீன மக்களை அங்கிருந்து மேலும், மேலும் வெளியேற்றும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இஸ்ரேலிய ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்டு, சுதந்திர நாடொன்றைஅம் மண்ணில் அமைப்பதற்கான போராட்டமே இன்றியமையாததாகும். இஸ்ரேல் அரசின் இராணுவ இயந்திர அடக்குமுறை, அதன் உளவுத் துறை ஆகியவற்றை மீறி, ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணின் மக்கள்தாங்களாகவே கிளர்ந்தெழுந்து, நடத்துவதேஇதன் தனிச்சிறப்பாகும். அம்மண்ணில் இயங்கும் இரகசியத் தலைமையொன்றே வீரமும், தியாகமும் நிறைந்த இம்மக்கள் எழுச்சியை வழி நடத்தி வருகிறது. 1987ம் ஆண்டு டிசம்பர் மாதம், 20வருட ஆக்கிரமிப்பின் விளைவால் ஆரம்பமான இன்றிபாடா இன்றுவரை ஆக்ரோஷத்துடன் தொடர்கிறது. காஸாப்பகுதியில் இஸ்ரேலிய இராணுவ வாகனம் 4 பலஸ்தீனத் தொழிலாளர்களைப் படுபாதகமாக மோதிக் – கொன்றதையடுத்து– அதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலம் –ஆரம்பத் தீப்பொறியாக அமைந்தது. பின்னர் அது தொடர்ச்சியான எதிர்ப்பு நடவடிக்கையாக, ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டமாக உருவெடுத்தது. இதனை ஆயுதநடவடிக்கை என்றும் கூறமுடியாது. அகிம்சைப் போராட்டம் என்றும் ஆகாது. எனினும் அங்கு நிலவும் சூழல நிலைமைகளுக்கும், தேவைகளுக்கும் வசதிகளுக்கும் ஏற்றவாறு மக்களை அணி திரட்டி நடைபெறும்இச் சுதந்திரப் போராட்டம் தனித்தன்மையுடன், பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் (பி.எல்.ஓ.)பின்னணி ஆதரவுடன் பெரு நெருப்பாகச் சுவாலை விட்டு எரிகின்றது.

இப்போராட்ட வடிவம் பல்வேறு உத்திகளையும் அம்சங்களையும் உள்ள

www.tamilarangam.net

டக்கியதாக உள்ளது. ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், கடையடைப்புக்கள், மக்களைப் பெரிதாகப் பாதிக்காத வகையில் சில நாட்கள் அல்லது ஒரு வார வேலை நிறுத்தங்கள் இடம்பெறுகின்றன. மரண ஊர்வலங்களும், கொல்லப்பட்டவர்களின் நினைவுதின நிகழ்ச்சிகளும் போராட்ட உத்திகளாகப் பயன்படுகின்றன. கூட்டம் கூடும் சுதந்திரத்திற்கான தடையை இவை முறியடிக்கின்றன. தடை செய்யப்பட்ட பலஸ்தீனக் கொடியைப் பிடித்திருத்தல், ஏற்றுதல், தேசிய கீதத்தை, விடுதலைப் பாடல்களை இசைத்துச் செல்லுதல் ஆகியவை அமைதிவழிப் போராட்ட முறைகள். இஸ்ரேலிய இராணுவ அடக்கு முறைக்கு உள்ளாகும் போது கையில் அகப்பட்ட பொருட்களால் இராணுவத்தைத் தாக்குதல் கல்லெறிதல், கவண்களால் கல்லடித்தல் ஆகிய குறைந்தபட்ச வன்முறையை இன்திபாடா கைக்கொள்கிறது. போர் ஆயுதங்கள் இரகசியமாக ஆங்காங்கே பதுக்கி வைக்கப்படுகின்றன என்ற செய்தியும் அங்கு உலவுகிறது. இஸ்ரேலிய பொருட்களைப் பகிஷ்கரித்தல், இஸ்ரேல் அரசாங்க நிர்வாக, பொலிஸ் கடமைகளிலிருந்து விலகுதல், துரோகிகள் ஒழிப்பு ஆகியவையும் போராட்ட அம்சங்களாக உள்ளன.

இஸ்ரேலிய அரசாங்கமும், இராணுவமும் இந்த எழுச்சியை அடக்கக் கடும் நடபடிக்கை எடுத்து வருகின்றன. ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், கல்… யும் சிறுவர்கள்மீது கண்ணீர்ப்புகைத் தாக்குதல், துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவற்றை மேற்கொள்ளுகின்றன. உலோக ரவையினால் பெருமளவில் உயிர்கள் பறிக்கப்படுவது கண்டு, உலக அபிப்பிராயத்திற்குப் பயந்த இஸ்ரேலிய அரசு பிளாஸ்ரிக், றப்பர் ரவைகளையும் பயன்படுத்துகின்றன. பிளாஸ்ரிக் ரவைகள் கடும்காயங்களை ஏற்படுத்துவது மட்டுமல்ல, உயிர் குடிக்கவும் வல்லது. பலரை கண்ணில்லாத, உறுப்புகள் சிதைந்த அங்கவீனர்களாக்கியிருக்கிறது. துப்பாக்கிச் சூட்டுக்கு இரண்டு, மூன்று வயதுக் குழந்தைகள், வயது முதிர்ந்தோர், கர்ப்பிணிப் பெண்கள் பலர் உயிரிழந்துள்ளனர். மிகத் தாக்கமான புகைக்குண்டை சர்வதேச விதிகளுக்கு மாறாக வீதிகளுக்குள் வீசுதலும் கருச்சிதைவுகளுக்கும், அங்கவீனர்களான பிள்ளைகள் பிறப்பதற்கும் வழி வகுத்துள்ளது. தடியடிப் பிரயோகமும், மிருகத்தனமான தாக்குதலும், எலும்புகளை முறித்து நிரந்தர முடங்களாக்கி விட்டுள்ளன.

பெண்கள், குழந்தைகள் உட்பட பல்லாயிரக் கணக்கில் சிறைகளில் அடைக்கப்பட்டுக் கொடூர சித்திரவதைகளுக்குப் பலர் உள்ளாக்கப்பட்டுள்ளனர். சிலர் சிறைச்சாலைகளில் இறந்து போயுள்ளனர். சிலர் நாடுகடத்தப்பட்டுள்ளனர். வீடுகள் புல்டோசர் கொண்டு தகர்க்கப்படுகின்றன. இஸ்ரேலிய இராணுவத்துக்கெதிரான வன்செயல் ஓரிடத்தில் நடந்தால் அவ்விடத்து மக்கள் அனைவரும் கூட்டுத் தண்டனைக்குள்ளாக்கப்படுகிறார்கள். "கலகம் நீடிக்கப்படும்வரை வருத்துதலும் அதிகரித்துச் செல்லும்" என்று இஸ்ரேலிய ~~முன்னாள்~~ பாதுகாப்பு அமைச்சர் ராபின் பகிரங்கமாக அறிவித்தார். இதுவரை 300க்கு அதிகமான பலஸ்தீனிய மக்கள் எழுச்சி நடவடிக்கைகளின்போது இஸ்ரேலிய இராணுவத்தால் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இராணுவ அடக்குமுறை பலனளிக்காது கண்டு, பொருளாதாரத்தடை போன்ற நடவடிக்கைகள் மூலம் அடிபணிய வைக்க இஸ்ரேலிய அரசு முயல்கிறது. இஸ்ரேலியப் பகுதிகளிலிருந்து உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதை நீண்ட நாட்களுக்கு தடைசெய்து விடுகிறது. அண்டையிலுள்ள ஜோர்தான் நாட்டிலிருந்து பலஸ்தீன மக்கள் உணவுப் பொருட்களை கொண்டு வருவதையோ, அங்கு சென்று வியாபாரம் செய்வதையோ எல்லைகளை மூடுவதன்மூலம் நிறுத்தி விடுகிறது. இத்தகு கஷ்டங்கள், சித்திரவதைகள், வறுமை மரணம் ஆகியவை அம்மக்களைச் சு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றிந்து அமுக்கிய போதிலும் அவற்றினை ஊடறுத்துக் கொண்டு, போராட்டம் புதிது புதிதாகத் துளிர்த்துக் கொண்டிருக்கிறது.

பலஸ்தீன மக்களின் இவ்வெழுச்சி அவர்களது விடுதலைப்போர் வெற்றிபெறுவதற்கான பல்வேறு பயன்களை அளித்து வருகிறது.

பலஸ்தீன மக்களிடையே உள்ள இஸ்லாம்—கிறிஸ்தவம் என்ற மதவேறுபாடுகள், தீவிர இஸ்லாமிய அடிப்படைவாதிகளுக்கும், முற்போக்கு மதசார்பற்ற போக்கினையுடைய இடதுசாரிகளுக்கும் இடையிலான முரண்பாடுகள், கிராமிய, நகர்ப்புற மாறுபாடுகள், அதிகாரப் பிரபுத்துவ வர்க்கம், சாதாரண மக்களுக்கிடையிலான வர்க்க முரண்பாடுகள் அனைத்தும் போராட்டத்துக்குள் அமிழ்ந்து எஃவென உறுதிப்பட்ட தாக பலஸ்தீன சமுதாயம்மாறி வருகின்றது.

சர்வதேச மக்களிடையிலும், நாடுகளிலும் மிகுந்த அனுதாபத்தையும் ஆதரவையும் பலஸ்தீன விடுதலையின்பால்திரட்டி உலக அபிப்பிராயம் மாற்றம் அடைய இன்றிபாடா வழி வகுத்து வருகின்றது. மேலும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதிலும் பொருளாதாரத் தேவைகளிலும், நிலைமைகளைச் சமாளித்துக்கொடுப்பதிலும்பலஸ்தீன மக்கள் சுய-சார்பினை அடைந்து வருகிறார்கள். இஸ்ரேல் அரசிடமோ, உலகநாடுகளிடமோ முற்றிலும் தங்கியிராது—தம்காலில் நிற்கப் பழகி வருகிறார்கள். பொருளாதாரத் தடை, வேலை நிறுத்தங்கள், வேலை விலகல் போன்றவற்றால் ஏற்படும்பொருளாதாரப் பண நெருக்கடிகளை வெற்றிகரமாகச் சமாளிக்கிறார்கள். விவசாயத்துறையில் வீட்டுத் தோட்டங்களை ஏற்படுத்தியும் எரிபொருள்வாகனங்களுக்குப் பதில் கழுதைகளைப் பயன்படுத்தியும், உணவுசமைப்பதற்கு மின்சாரத்துக்கு மாறாகவிறகு, தடிகளை உபயோகப்படுத்தியும் பழகி விட்டனர். ஒருநாடு அமைவதற்கு முக்கிய படிக்கட்டுவான சுயசார்பு பொருளாதாரம் என்ற அளவில் இப்போராட்டம்ஆக்கபூர்வமான பாடங்களை அளித்து வருகிறது.

ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணில்போராட்டம் நடைபெறும் அதேவேளை பலஸ்தீன விடுதலை இயக்கம் வெளிநாடுகளிலிருந்தவாறு ஆற்றும் ராஜதந்திர நடவடிக்கைகள்— இன்றிபாடாவின் போராட்ட விளைவுகளைப் பூரணப்படுத்தி, விடுதலையைக் கனியச் செய்கின்றன. சர்வதேச ஆதரவு திரட்டலுக்கும், அங்கீகாரத்துக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பிரச்சார நடவடிக்கைகளை செய்வதோடு, அதன் ராஜதந்திர செயல்பாடுகள் சர்வதேச அனுசரணையுடன் நிரந்தரத் தீர்வு காணும் வழிகளைத் திறந்து விடுகின்றன. அண்மையில் அல்ஜீரிய — நாட்டின் தலைநகரான அல்ஜீயர்ஸில் கூடிய பலஸ்தீன தேசியக்கவுன்சிலின் மகாநாடு, இஸ்ரேலிய அரசை மறைமுகமாக அங்கீகரித்து, ஆக்கிரமிக்கப்பட்ட மண்ணில் பலஸ்தீனியர்களின் சுதந்திர நாட்டுஅரசாங்கத்தையும் பிரகடனம் செய்தது. இப்பலஸ்தீன அரசாங்கத்தை நூற்றுக்கு மேற்பட்ட நாடுகள் அங்கீகரித்து வருகின்றன. அம்மகாநாட்டுத் தீர்மானத்தின் மூலம் இஸ்ரேலுக்கும், அதன் காப்பாளரான

(18ம் பக்கம் பார்க்க)

(10ம் பக்கத் தொடர்ச்சி...)

தண்டிகை, யாப்பருங்கலங்காரிகை ஆகியவற்றைப் படிப்பதெப்படிப் புலவர்களுக்கு அத்தியாவசியமானதோ, அதேபோலச் செக்கோவ் கதைகளைச் சிறுகதை ஆசிரியர்கள் படிக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

* * *

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற "கலை இலக்கிய - விழாவில் திரு. கா. சிவத்தம்பி அவர்களின் சிறப்புத் தொகுப்புரை.

(நன்றி—சஞ்சீவி—30/7/88)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதைபற்றி.. கா.சிவத்தம்பி.

சிறுகதை உலகப்பொதுவான இலக்கிய வடிவம்.

இது தமிழிலிருந்து வரவில்லை.

இந்தியாவிலிருந்து வரவில்லை.

ஆசியாவுக்குள்ளிருந்தும் வரவில்லை.

எமக்கு இது காலவரை — தோன்றிய இலக்கிய வடிவங்கள் எல்லாமே ஒன்று தமிழ் நாட்டிலிருந்து வந்ததாக இருக்கும். (அகம், புறம்) மற்றது இந்திய மரபுக்குள்ளிருந்து வந்ததாக இருக்கும். (காவியம், புராணம்).

சிறுகதை அவற்றுக்கு முற்றிலும் அப்பாலுள்ள ஒரு தளத்திலிருந்து வந்துள்ளது.

இதனுடைய உரைகல் தமிழ் நாட்டில் இல்லை. இந்தியாவில் இல்லை.

இதனுடைய உரைகல் அமெரிக்காவில் இருக்கிறது. சோவியத் யூனியனில் இருக்கிறது. பிரான்சில் இருக்கிறது. இங்கிலாந்தில் இருக்கிறதென்றும் கூறலாம்.

நாவலுக்கும், சிறுகதைக்கும் வருவோம்.

எவ்வாறு கைத்தொழிற்புரட்சி, நவீனமயமாக்கம், மேல் நாட்டு ஆதிக்கம் எம்மிடம் ஒரு பொதுவான கல்விக் கருத்தை பொதுவான ஆடை அணியும்முறையை (Standard Universel form) கொண்டு வந்ததோ அதேபோலச் சில International Biterary forms ஐயும் கொண்டுவந்தது.

அதில் ஒன்றுதான் புனை — கதை (fiction).

தமிழில் சிறுகதைகள் உண்டே தவிரத் தமிழ்ச்சிறு கதைகளென்று பேசலாமோ என்று எனக்கொரு சந்தேகம்.

தலைசிறந்தவையா?

தமிழில் நல்ல சிறுகதைகள்எழுதலாம். ஆனால் அவைஉலகத்தில் தலைசிறந்த சிறுகதைகளா?

'அன்னகரினா' நாவல் பற்றி டால்ஸ்டாய் சொன்னார்.

"நாம் (ரஷ்யர்கள்)ஐரோப்பிய இலக்கிய அரங்குக்குள் 'அன்னகரினா' நாவலுடன் நுழையலாம்" என்று டால்ஸ்டாய் சொன்னார்.

என்னுடைய கேள்வி, நாம்உலகப் புனைகதை அரங்கில் எந்த ஆக்கங்களைக் கையில் வைத்துக் கொண்டு நுழையலாம் என்பதே?

பிரெட்ரிக் ஜேம்சன் என்பவர் அமெரிக்கப் பேராசிரியர். மார்க்சிய விமர்சகர்.

மூன்றாவது உலக நாடுகளிலுள்ள இலக்கியத்தை மிக அனுதாபத் — தோடு பார்ப்பவர். அண்மையில் ஒரு கட்டுரை எழுதினார்.

"மூன்றாவது உலக நாடுகளைச் சேர்ந்தவர்கள் தலைசிறந்தஎழுத்தாளர்களை ஏன் தோற்றுவிக்கவில்லை?" இப்படி அவர் கேட்கிறார்.

தமிழ் நாவல் என்ற மதிப்பீடு உலக நாடுகள் என்ற வட்டத்துள் வரவேண்டும்.

நாங்கள் தமிழில் நாவல் எழுதலாம். ஆனால் தமிழ் நாவல் ஒன்றோடு போகிறபோது அந்த நாவல் என்கிற உலக இலக்கியக் களம் விரிவடைய வேண்டும்.

சிறுகதையைப் பொறுத்தளவில் உலகத்தைப் பற்றிச் சொல்லமுடியாது. அதுபற்றிய அறிவு எனக்குப் போதாது. நாங்களும் — மொழிபெயர்ப்பு நூல்களைத் தான் வாசிக்கிறோம். அதனால் ஒன்றும் சொல்ல முடியாமல் உள்ளது.

www.tamilarangam.net

பெருமை

ஆனால் ஒன்றைப்பெருமையாகச் சொல்லலாம்.

அகில இந்திய மட்டத்தில்போகும்போது, தமிழ்ச்சிறுகதைகளுடன்பெருமையோடு போகக் கூடிய எழுத்தாளர்கள் நம் மத்தியில் இருக்கிறார்கள் என்று பெருமையாக சொல்லலாம்.

பாரதி எழுதியது சிறுகதைகள் அல்ல; அவை சிறிய கதைகளே. பாரதி பற்றி நான் ஆய்வுசெய்ய விரும்பவில்லை.

தாகூரின் மொழி பெயர்ப்புக்களைச் சிறுகதைகளில் சேர்க்கலாம்.

தமிழகத்தில் ஏற்பட்டு வருகிற சிறுகதை வளர்ச்சி உன்னத மான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் இப்போது ஏற்பட்டுக் கொண்டிருக்கிறசமூகமாற்றம் பற்றிய தெளிவு எல்லாஎழுத்தாளருக்கும் இல்லை.

இந்த மாற்றம் ஊடே காணப்படுகிற சமூக இன்னல்களை, குறிப்பாகக் கிராமப் புறங்களிலே ஏற்படுகிற சமூக, தனிமனித உறவுகளை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறார்கள்.

எமது சிறுகதைகள் இப்போதும் காரண காரயத்தொடர்புடன்தான் இருக்கிறது.

இன்றும் எம்முடைய சமூக அமைப்பில் தனிமனிதன் ஒரு சமூக அலகு அல்ல. அப்படி சமூகஅலகாக மேல்நாடுகளில் கருதப்படுகின்றது.

குடும்பத்திலே ஏற்படுகிறசிதைவுகள், தாக்கங்கள், தன்மைகள் தனிமனிதர்கள் படும் அவலங் கள் தான் எமக்குக் கருவாகஅமைகின்றன.

அந்தக் காரணத்தினால் தான் குடும்பத்தின் அச்சாணியாகக் கருதப்படும பெண்கள் எமது புனைகதைகளிலே முக்கியமான இடத்தைப் பெறுகிறார்கள்.

தாயாக, தங்கையாக, காதலியா, மனைவியாக எந்த வகையாகப்பார்த்தாலும் ஒரு Crisis Analysis செய்து பார்ப்போமானால் பெண்களுடைய அனுபவங்களிலே ஏற்படுகிற மாறுதல்பெரும்பான்மையாக அமைகின்றன.

சமூகம் வளர்ந்து கொண்டு — போகிறது. ஒருகாலத்தின்வளர்ச்சிப்படி தான் இன்னொரு காலத்தில் வரலாறாக மாறுகிறது. அந்தவளர்ச்சிப்படியின் தளத்தில் நின்று கொண்டு நாம் இதனைப்பார்க்க வேண்டும்.

சிறுகதையின் தன்மை இன்று மாறி விட்டது.

சீவக சிந்தாமணியில் இருந்த காப்பியம் அல்ல கம்பன் கையாண்ட காப்பியம்.

இந்த மாற்றங்களினூடாகசிறுகதை, மனிதனின் Moral பிரச்சினைகளைப் பற்றிய தேடுதலுக்கான வடிவமாக உள்ளது. எம்மிடம் அந்த வளர்ச்சி இன்னும்வரவில்லை. எம் சமூகத்தில் இவ்வளவு மாற்றம் ஏற்பட்ட பிறகும் கூட நாம் இன்னும் Basically rooted on our soil ஆக இருக்கிறோம். அதை இழக்காத வரை நாம் அன்னியப்பட்ட மனித பண்பு பற்றிப் பேச முடியாது. ஏனென்றால் நான் இன்னும் அன்னியப்படவில்லை.

புனைகதையில் மொழிநடை

புனைகதையில் மொழி பற்றிய அம்சங்களை நிதானமாகப்பார்க்கவேண்டும்.

மொழியைக் கையாளுவது என்பது வெறுமனே சித்தரிப்பதல்ல.

உள்ளத்தைப் படம் பிடிக்கவே எழுத்தை நாம் பயன்படுத்துகிறோம் என்று நினைக்கிறேன். அப்படி அல்ல.

You are modelling reality.

யதார்த்தமாக உள்ள ஒன்றுக்கு எழுத்தாளன் பிரதிவடிவம்கொடுக்கின்றான். அந்தப் பிரதி வடிவம் கொடுக்க எழுத்தாளன் பயன்படுத்தும ஆயுதமே மொழி. ஆகவே, அந்த மொழியில் நிதானம் வேண்டும். அதில் loose ஆக ஒன்றும் நிச்சயம் இருக்கக் கூடாது.

எழுத்தாளனுக்கு மொழி ஊடகம்.

காப்பியங்களுக்கு ஒரு மொழி நடை இருப்பது போல.

சிற்றிலக்கியங்களுக்கு ஒரு மொழி நடை இருப்பது போல.

புனைகதைக்கோ, சிறுகதைக்கோ, நாவலுக்கோ எம்மிடம் Language of Fiction இருக்கிறதா?

தமிழில் இந்தப் புனைகதை — மொழிப் பாரம்பரியம் ஒன்று மொழியியல் ரீதியில் வளர்ந்துள்ளதா? மொழி வளராததினாலேபல எழுத்தாளர்கள் ஏற்கனவே இருக்கின்ற சில தொடர்களைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தி வருகின்றனர்.

மொழிக்கு ஒரு ஆற்றல் உண்டு. ஆற்றலுக்கு ideology முக்கியம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ideology இருக்க வேண்டும்.

உலகம் உருண்டை அல்ல; தட்டையென்று சொல்கிற தத்துவஞானிகள் இன்றும் இருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் அதை விசுவாசத்துடன் சொல்கிறார்கள். அந்த நேர்மை எழுத்தாளருக்கும் வேண்டும். இல்லையென்றால் இலக்கிய மேவராது.

இது விடயத்தில் பத்திரிகாசிரியர்களுடைய பொறுப்பு மிகமிக முக்கியம். அவர் அந்த இதழை மாத்திரமல்ல, சிறுகதையையும் எடிற் செய்ய வேண்டும்.

கைலாசபதி காலத்தில் சிறுகதைகளுக்கு ஒரு மதிப்பு இருந்தது.

காரணம் கைலாசபதி ஒவ்வொரு சிறுகதையையும் எடிற்பண்ணினார்.

சரியோ, பிழையோ எழுத்தாளனுக்கு ஒரு சமூக அந்தஸ்துவந்து விட்டது. எழுத்தாளனைக் கிண்டல் பண்ணிய பண்டிதனுக்கு இல்லாத அந்தஸ்து எழுத்தாளனுக்கு இன்று உண்டு.

எழுத்து என்பது, எழுத்தாட்சியின் நுணுக்கங்களைப் பற்றிக்கவனியாத ஒன்றாக விளங்குகிறது.

எழுத்தாளனுக்குக் கிடைத்துள்ள சமூக அந்தஸ்து காரணமாகஎழுத்து என்பது மலினப்படுத்தப்பட்டுவிட்டது.

எம்மை எதிர்நோக்குவதுவெகுஜனப் பண்பாட்டின் ஆதிக்கமே.

வெகுஜனப்பண்பாட்டின் வளர்ச்சிகாரணமாக, இலக்கியம் மற்றைய சாதனங்களோடு போட்டி போட்டுகொண்டு வளர வேண்டியுள்ளது. அதற்குக் காத்திரமான இலக்கியம் தேவை.

மக்கள் இலக்கியம் என்பதுஎல்லோரும் வாசிக்கும் இலக்கியம் அல்ல. அது காத்திரமான இலக்கியம் serious writing தான் இன்றைக்கு வேண்டியது.

எழுத்தாளன் தன்னுடைய Craft பற்றி தான் எழுதுகிற தன்மை பற்றித் தெரிந்திருந்தால் தான் அந்த serious writing வரும்.

உலக இலக்கியங்கள், அவற்றின் வளர்ச்சி பற்றிக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மலைநாட்டார் பாடலும் கண்ணீர்க் கதைகளும்

- கல்யாண்

இன்றைக்கு இலங்கையின் அந்நியச் செலாவணியில் பெரும் பங்கினை ஈட்டித் தருவது பெருந்தோட்டப்பயிர்ச் செய்கையென்றால் அது மிகையானதல்ல. ஆனால் இன்றைய நிலையில் இலங்கையின் மொத்த சனத் தொகையின் வறுமைக்கோட்டுக்குக் கீழே ஆகக் கீழ்மட்டத்து வாழ்க்கை நடாத்தி வருபவர்கள் இந்த அந்நியச் செலாவணியில் பெரும் பங்கினை ஈட்டித் தருகிற உழைப்புக்குச் சொந்தக்காரர்களான மலைவாழ் மக்களே எனலாம்.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் கண்டியை நோக்கி உழைக்கும்நோக்குடன் புலம் பெயர்ந்துள்ளஇவர்கள் பனிவிடியாப் பொழுதுக்குள்ளே முதுகிலே உடையுடனும் தலையிலே முக்காடுடனும் புறப்படுகின்ற பெண்களும், கவ்வாத்துக் கத்தியுடன் புறப்படுகின்ற ஆண்களும், மாலைக் கருக்கல்களில், முகந்தெரியாத இருள்களில் தான் வீடு திரும்பினர். இவர்கள்வாழ்கின்ற உறைவிடங்களை லயன்கள் என அழைக்கப்பட்டாலும் உண்மையிலேயே அவைகள் மனிதர்கள் — வாழ்வதற்கான எந்தவிதமான அடிப்படை வசதிகள் அற்றவைகளாகவே இன்றுவரை காணப்படுகின்றன.

பஞ்சம் செழித்திருக்கின்றஅவர்களது வாழ்க்கையில் ஊட்டம் இல்லாத போசாக்கற்ற குழந்தைகளே, அவர்கள் சேகரித்துவைத்திருக்கும் செல்வங்கள். பரட்டைத் தலைகளுடனும் ஒட்டிய வயிற்றுடனும்விலா எலும்புகளை வெளிக்காட்டிக் கொண்டு எதையோ யாசிக்கின்ற குழிவிழுந்த கண்களுடன் லயத்தின் முற்றத்தில் நிற்கின்ற அந்தச் சிறுவர்கள் நாளையோ அன்றி மறு நாளோ தோட்டத்துக்கு வேலைக்கு வருவார்களெனத் தோட்டத்து அட்டைகள் காத்துக்கொண்டிருக்கின்றன.

[illegible] சகதி நிலங்களிலும், சருகு மறைவுகளிலும் வாழ்ந்து மரித்துக் கொண்டிருக்கின்ற இந்த மனித உயிர்கள் தென்னிந்தியாவிலிருந்து புலம் பெயர்ந்து கண்டிச் சீமைக்கு வந்தபோது எண்ணிறந்த கனவுகளையும், கற்பனையும் நெஞ்சம் முழுவதும் வளர்த்துக்கொண்டேவந்தனர். ஆனால் இங்கே வந்தபின்னர்தான் அவர்களுடைய கனவுகள் வெறும் கானல்நீர் என அறிந்து கொண்டனர்.

"இலங்கையில் முதலாளித்துவத்தின்பிரிட்டிஷ் குடியேற்றவாதத்தின் முதல் வெளிப்பாடு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாகவேஇருந்தது. நமது நாட்டில் அந்நியமுதலாளித்துவம் நிலை கொள்ளத் தொடங்கியமையை அப்பொருளாதார அமைப்பே முதன்முதலாக முரசறைந்தது. முதலாளித்துவமும்ஏகாதிபத்தியமும் தமது வளர்ச்சியின்போது தேசவரம்புகளைக்கடந்து அந்நியக் குடியேற்ற வாதிகள்— பெருந்தோட்டச் சொந்தக்காரர்கள் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களை இங்கு கொணர்ந்தனர். தொழில்முறை ஒப்பந்தப் பிணைப்புச் செய்துகொண்டு இங்குவந்த தென்னிந்தியத்தொழிலாளர்கள் ஏறத்தாழக் கொத்தடிமைகளாகவே புதிய வாழ்க்கையைத் தொடங்கினர். கண்டிச் சீமைக்குக் கனவுகளுடன் வந்தனர். புலம் பெயர்ந்தவுடன் அவர்களது வாழ்க்கை ஆரம்பமாகிறது. இன்றுவரை அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்துள்ளனர்."

"புலம் பெயர்ந்து வந்தமையினாலும் பொருளாதாரச் சுரண்டலினாலும் முதலாளித்துவ அரசியல் அமைப்பில் அடிக்கடி நிகழும் பதவிப் போட்டிகளினாலும், சூறையாடப்பட்ட ஒரு சமூகத்தைச் சேர்ந்த மக்களது, காலமெல்லாம்

துன்பக் கேணியில்தோய்ந்துவாழும் மக்களது வாழ்க்கையும் தவிர்க்க இயலாதவாறு பல்வேறு மாற்றங்கட்கு உட்பட்டே வருகின்றது. தற்போதைய காலகட்டத்தில் இலங்கை மலையகத் தோட்டத் தொழிலாளர் மத்தியில் தொழிற் சங்கங்கள் ஊடுருவி வருவதையே பேராசிரியர் கைலாசபதி அவர்கள் மேற்கண்டவாக்கியங்களின் மூலம் காட்டுகின்றார். ஆனாலும் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க பெரிய மாற்றங்கள் எதையுமே இந்தத் தொழிற் சங்கங்கள் சாதித்து விட்டதாகச் சொல்வதற்கு இல்லை. காரணம் பெரும்பாலும் முதலாளித்துவ அரசியல் கட்சிகளின் தொழிற் சங்கங்களே மலையகத்தை ஊடுருவி வருவது கின்கூடு.

ஆக மொத்தமாக இவர்கள் படுகின்ற அவலங்களை உண்மையில் தீர்த்து வைப்பதற்கு யாருமேமுன் வந்ததாகத் தெரியவில்லை.

இது இவ்வாறு இருக்க இலக்கிய வளர்ச்சி என்பதும் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேறியதாகத் — தோன்றவில்லை. நாள் முழுவதுமே உடல்உழைப்பில் ஈடுபடுகின்ற மக்களுக்குக் கிடைக்கின்ற ஊதியமோ ஒருநேரச் சாப்பாட்டுக்கே போதுமானதாக இல்லை. இதனால் கல்வியறிவு வீதம் இங்கே ஆகக் கீழ் மட்டத்திலேயே இருந்தது. ஒவ்வொரு பெற்றோரும்தமது பிள்ளைகளைக்குறிப்பிடத்தக்க வயது வந்தவுடன் தங்களுடன் வேலைக்குக் கூட்டிக் கொண்டு சென்றுவிடுவதால் அவர்கள் கல்வியறிவு விகிதம் மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றது. வயிற்றுப்பசியின்முன் அறிவுப்பசி அமிழ்ந்துபோவது ஒன்றும் வியப்புக்குரிய தாக இல்லை. இன்றைய ஈழத்துஇலக்கிய வளர்ச்சியில் ஒருசில இலக்கியவாதிகளே மலையகப் பிரச்சினையைத் தொட்டு இலக்கியம் படைப்பவர்களாக இருப்பதோடு மலையகத்திலும் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் இலக்கியவாதிகள் சமகாலத்தில் உருவாகியுள்ளனர்.

ஆனாலும், தமது பிரச்சினைகளை, கனவுகளை, கற்பனைகளை ஆசைகள், எதிர்பார்ப்புகள்.. அபிலாசைகள் போன்றவற்றை இலக்கியத்தில் வடிக்கப் பெரும் இலக்கியவாதிகள் வருவார்களென மலைவாழ் மக்கள் எவரும்காத்திருக்கவில்லை.

படிப்பறிவற்ற பாமரர் கள் பாசையில் கிராமிய பாடல்களுக்கே உரித்தான நடையுடன்தம் மனஉணர்வுகளை பாடல்களாகவடித்திருக்கின்றனர். இனி மலையக நாட்டார் பாடல்கள் சிலவற்றில் இருந்து அவர்தம் மன உணர்வுகளையும் அவலங்களையும் பார்ப்போம்.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியிலேயே இலங்கை மலையகத்துப் பெருந்தோட்டங்களுக்கு — வேலைசெய்வதற்காக அன்றாடச் சாப்பாட்டுக்கு வழி புரியாமல் திகைத்து நின்ற தென்னிந்தியக்கிராமிய மக்களுக்கு, கண்டிச்சீமையை ஒரு சொர்க்கபுரியாக வர்ணித்து அவர்கள் மனதிலே ஆசைவிருட்சங்களை வளரவைத்துக் கூட்டி வந்தனர். ஆனால், அந்தோ பரிதாபம், இங்கேவந்த பின்னர் வான்முட்டும் இந்தமலைகளின் பற்றைக் காடுகளைக்கண்டவுடன் மனப்பரப்பில் பதியப் போட்டப்பட்ட நந்தவனங்களும் கருகிப் போயின.

"கண்டி கண்டிஎங்காதீங்க
கண்டிப்பேச்சுப்பேசாதீங்க
கண்டி படும் சீரழிவே
கண்டபேரு சொல்வாங்க"

இந்தப் பாடலின்மூலம் இவன் என்ன சொல்ல நினைக்கிறான்? நெஞ்சம் முழுவதும் செல்வக்கனவுகளில் மிதந்துகொண்டு கண்டிச்சீமையில் கால்புதைத்த இவன் ஏன் இப்படி மனச்சோர்வடைந்தான்? தனக்குப் பின்னாலும் தன்

www.tamilarangam.net

உறவினர்கள் வெற்றுக்கனவுகளுடன் வந்திறங்கி ஏமாறப்போவதை எச்சரிக்கவா?

"அட்டை கடியும்
அரியவழி நடையும்
கட்டை ஏறுவதும்
காணலாம் கண்டியிலே"

ஆம். இங்கே அவர்கள் எண்ணிக் கொண்டு வந்தது போல்இல்லை. அவர்களை வேலைக்குச் சேர்த்த முதலாளிகளின் தரகர்கள்சொன்னதுபோல் கண்டிச்சீமை— சொர்க்கவுரியில்லை. வெறும் மலைக்காடு தான். தெருவசதியில்லாத ஒற்றையடிக்குறுகல் பாதையும் அட்டைக்கடியும், தறிக்கப்பட்ட மரங்களின் கட்டை குத்திக் கால்கள் காயப்படுவதும் தான்சகஜம்.

தொடர்ந்து பன்னிரண்டு மணி நேரமாக வேலை செய்து விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்தால்உடல் உழைப்புக்களை தீர உண்பதற்கு நல்ல உணவு கிடைக்காது. உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப் படாமையினால் பசிதீரச் சாப்பிட முடியாத நிலை. அரைவயிற்றுக் கஞ்சியுடன் பட்டினியுடன் படுக்கையிலே ஒரு ஏழைத் தொழிலாளியின் மனம் என்ன பாடு படும்?

"பாதையிலே வீடிருக்க
பழனிச் சம்பா சோறிருக்க
எருமே தயிரிருக்க
ஏண்டி வந்தே கண்டிச்சீமை?

உண்மை தான். தென்னிந்தியாவில் அந்த ஏழைகள் வாழ்வதற்குச் சிறு ஓலைக்குடிசைகள் கூட கிடைக்கவில்லை. அவர்கள்தான் ஏழைகள் ஆயிற்றே. அதனால் பாதைகளிலே படுத்துறங்கினார்கள். நிம்மதியான அவர்கள் வாழ்க்கைக்கு மிகவும் மலிவான அரிசியான பழனிச்சம்பா சோறு இருந்தது. கூடவே எருமைத் தயிருமிருந்தது.

இவை எல்லாவற்றையும் இழந்துவிட்டுக் கண்டிச் சீமையில் காசு பணம் உழைக்கலாம் என்று வந்தாயே..? இதைவிட அது எவ்வளவு மேலான வாழ்க்கை தெரியுமா? என்று தன் சிநேகிதியைப்பார்த்து கேட்கிறாள் போலும்.

கால் நீட்டிப் படுக்க முடியாத அந்தக் குறுகிய ஒடுங்கலான லயன்களில் பாதிப் பட்டினியுடனும் உடற்சோர்வுடனும் வருத்தும் குளிரில் நல்லபோர்வைத் துண்டேயில்லாமல் நடுங்கிக் கொண்டிருப்பவனுக்குத் திடீரெனத் தன் தாயின் ஞாபகம் வந்து விடுகின்றது. ஏழையாகப் பிறந்தாலும் "முத்தே மணியே! கண்ணே! என்று தன்னை தோள் மீதும் மடிமீதும் தாலாட்டிப் பாலூட்டி வளர்த்த அன்னையின் ஞாபகம் வந்ததும் அவனையறியாமலே கண்களில் நீர் சுரந்து வழிகிறது.

யாரும் அறியாமல் கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் - கொள்கிறான். புரண்டு புரண்டு படுத்தாலும் நித்திரை வருவதாக இல்லை. சிறுவயதில் துள்ளித்திரிந்த அவனது ஊர் ஞாபகத்துக்கு வருகின்றது. அன்னையின் நினைவு மனதை அலைபாய வைக்கிறது.

"ஊரான ஊரிழந்தேன்
ஒத்தப்பனை தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்ததாயை நாமறந்தேன்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அவனது அந்த அநாதரவான நிலை வஞ்சிக்கப்பட்ட நிலை வார்த்தை பிரயோகங்களாக மேற்கண்ட பாடலாகின்றது.

வான்முட்டுகின்ற மலை முகடுகள் தேயிலை, இறப்பர், கோப்பிதன்னும் பச்சைப் போர்வை போர்த்திக் கண்ணுக்குக் குளிர்மை தருகின்ற அந்த மலைகள்.. ஆம் அந்த மலைகளைப் பார்க்குந்தோறும் எம் மனதினிலே இப்படியான இயற்கை அனுபவிப்பு எண்ணமே தோன்றுவது வழமை. ஆனால், அதோ.... அங்கே ஒருத்தி பாடுவது உங்கள் செவிகளில் கேட்கின்றதா?

"கூனி அடிச்ச மலை
கோப்பிக்கன்று போட்ட மலை
அண்ணனைத் தோத்த மலை
அந்தா தெரியுதடி"

இந்த மலைகள் இன்று செல்வம் கொழிக்கின்றன. ஆனால் என்னுடைய அண்ணனைப் போல் எத்தனை அண்ணன்மாரின் குருதியிலும் வியர்வையிலுமாக இது செழித்து நிற்கின்றது என்பது உங்களில் யாருக்கேனும் தெரியுமா..? என்று சோகராகம் இசைக்கிறது அவளது அடிமனது. என்முன்னோர்கள் உடலை உரமாக்கித் தான் இந்தக் கோப்பிக் கன்றுகள் சிரித்துக்கொண்டு நிற்கின்றது என்கிறாள் அவள்.

எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியில் அவள் தேயிலைத் தோட்டத்தில் கொழுந்தெடுக்கையில்,

"காலையிலே நெரே புடிச்சு
காட்டுத்தொங்க போய்
—முடிச்சு
கூடே நெறயலே — இந்த
கூனப்பய தோட்டத்திலே"

அதிகாலையில் தோட்டத்துக்கு வந்து நிரைபிடித்துக் கொழுந்தெடுக்கத் தொடங்கித் தோட்டத்தின் கடைசி எல்லைவரை போயாகி விட்டது. ஆனால் இன்னமும் முதுகிலே தொங்குகின்ற கொழுந்துக் கூடை நிறையவில்லை. அதனால் தோட்டத்து முதலாளியைக் கூனப் பயல் எனத் திட்டுகின்றாள். ஆனால் இன்னொருத்தியோ,

"ஓடி நெரே புடிச்சு
ஒரு கூடே கொழுந்தெடுக்க
பாவி கணக்குப் புள்ளே
பத்து ராத்த போடுறானே"

அவளும் தான் அதிகாலையில் வேலைக்கு வந்து ஒரு நிரையிலேயே ஒருகூடை கொழுந்தெடுத்தும் விட்டாள். ஆனால்பாவி கணக்குப் பிள்ளை, பத்து ராத்தல்மட்டுமே அவள் கணக்கில் குறிப்பிடுகின்றான். வேலைக்கு ஏற்ற ஊதியம் வாங்கப்படவில்லையே என்ற அங்கலாய்ப்பை வாய்விட்டே பாடுகின்றாள். இன்னொருத்தியின் நிலையோ,

"பொழுதும் எறங்கிரிச்சு
பூமரமும் சாஞ்சிரிச்சு
இன்னமும் இரங்கலையோ
எசமானே ஒங்க மனம்
அவசரமா நான் போறேன்
அரே பேரு போடாதீங்க"

"பொழுது சாய்ந்து பூக்கள்கூட இதழ் கொட்டியாகி விட்டது. எசமானனே உன்மனம் இன்னும் இரங்கவில்லையா? அவசரமாக நான் போக வேண்டும். எனக்குஅரை நாட்கூலி போட்டு விடாதே... என்று கெஞ்சுகிறாள். இந்தக் கெஞ்சல்களும் அழுகைகளும் அன்றைய தோட்டத்துரைமாரின் காதில் கேட்டதாகத் தெரியவில்லை.

அன்றைய காலங்களில் தோட்டத்துக் கங்காணிமார்கள் எல்லோரும் ஜமீன்தார்கள் போலவே — வாழ்க்கை நடாத்தினார்கள். ஒவ்வொரு கங்காணிக்கும் இத்தனை அடிமைக் கூலிகள் என இருந்தனர். அவர்களுடைய வாழ்க்கை, திருமணம் என்பன வரை இந்தக் கணக்குப் பிள்ளைகளே ஆதிக்கம்செலுத்திக் கொண்டிருந்தனர். இதையே

"தோட்டம் பிரளியில்லே
தொரே மேல குத்தமில்லே
கங்காணிமாராலே
கனபிரளி யாகுதையா..

www.tamilarangam.net

www.tamilarangam.net

ஒரு பிரசவம் நடக்கிறது

-சுந்திரன்-

கடைசி பஸ் வண்டியும் போய்விட்டிருந்தது. ஆதிக்க வெறியர்களின் அட்டகாசத்தினால், ஊரே மயான அமைதியில் இருந்தது. அந்த பஸ் வண்டி போகும் பிரதான வீதியிலுள்ள வீடுகள் எல்லாம் இந்திய ஆக்கிரமிப்புப் படையினால் இடிந்து தரைமட்டம் ஆக்கப்பட்டிருந்தது. இடித்துத் தள்ளப்பட்ட மதிற் சுவர்கள், வெட்டிச் சாய்க்கப்பட்ட வேலிகளின் அப்பால் இருளில் மூழ்கியிருந்த அந்த இடிந்த வீடுகளும் பயங்கரமாகவே காட்சியளித்தது. வீடுகளின் பக்கமாக இருந்த பாரிய பலா, மா மரங்கள் கூட வெட்டப்பட்டு பரிதாபமாகக் காட்சி தந்தது.

வள்ளிப்பிள்ளைக் கிழவியை பார்த்தவுடனேயே எண்பது வயது மதிப்பார்கள். கொழும்பில் வேலை பார்த்த மகனையும் மருமகளையும் சிங்களக் காடையரிடம் பலி கொடுத்துவிட்டு, கடைக்குச் சென்ற மருமகனை இந்திய ஆக்கிரமிப்புப் படை பலி கொள்ள, அந்த அதிர்ச்சியில் மகளையும் யமன் அழைத்துச்செல்ல, எஞ்சியிருந்த ஒரே பேரனும் இயக்கம், போராட்டம் என்று போய்விட்டபின் கிழவியின் வயது எழுபதிலிருந்து எண்பதுக்கு பாய்ந்துவிட்டது.



இருளில் மூழ்கியிருந்த அந்த வீதியோரத்து சிறிய பஸ் தரிப்பில் வள்ளிப்பிள்ளை கிழவி எந்தவித பயமோ, சலனமோ இன்றி மடிப்பெட்டியை எடுத்து, பாதி வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவி, சிறிது சீவல் பாக்குடன் வாயிலிட்டுக் கொண்டாள்.

பஞ்சடைந்த கண்கள், கூனல் விழுந்த முதுகு, மேலே சட்டை எதுவும் இன்றி அந்த கந்தல் சேலையை அணிந்திருந்த விதம் கிழவியின் ஏழ்மையையும், நாகரீகத்துக்கு அம்பிடாத பழமையையும் உணர்த்தியது. கழுத்தில் எதுவும் அணியாவிட்டாலும், காதில் அணிந்திருந்த கனமான இரு தோடுகளும் சோளையுடன் இழுவுண்டு தோள்களைத் தொடுவது போல் இருந்தது.

கடந்த சில ஆண்டுகளாக இழக்கக்கூடாத எல்லாவற்றையும் இழந்ததால் வயோதிபமும் வெகு விரைவாகவே பற்றிக்கொண்டது போல் கற்றான் போல இருந்த கிழவி இளைத்துத் துரும்பாகி விட்டிருந்தாள்.

எந்த வாகனமும் ரோட்டில் வரவில்லை. கிழவிக்கு ஏமாற்றமாக இருந்தாலும், எப்படியும் வரும் என்ற நம்பிக்கை இருந்தது. புகையிலையில் சிறிது கிள்ளி வாய்க்குள் திணித்தபடி, அருகே இருந்த தனது ஓலைக்கடகத்தை கவனித்தாள்.

அழுக்கடைந்த கந்தல் உடுப்பு, சட்டி ஒன்றில் கொஞ்சம் குழையல் சோறு, சிறு ஓலைப்பெட்டியில் புழுக்கொடியல், ஒரு கரையில் சுருட்டியபடி இரண்டு புகையிலைகள் என்று பல பொருட்கள் அடங்கியிருந்தது.

சில நாட்களின் முன் திடீரென வீட்டுக்கு வந்த பேரன், வீட்டின் வாசற்படியருகே யத்திரமாக தாட்டு வைத்திருந்த சதுரமான பெட்டியொன்றையும் கிழவி அழுக்கு உடுப்புக்குக் கீழே ஒளித்து வைத்திருந்தாள்.

கிழவியின் பேரன், கூட வந்தவர்களுடன் கதைத்ததை ஒரு மூலையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த போதுதான் கிழவியின் மனதில் இந்த எண்ணம் உதித்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"மச்சான், இது பெரும் ஆபத்தான பொருள். இதன் மேலுள்ள கம்பியை தவறுதலாகவும் அசைத்துவிடாதே. இதை மறுபக்கம் திருப்பிய பத்தே நிமிடத்தில்..................."
பேரனுடன் வந்த அந்த பெடியனின் ஆலோசனை கிழவியின் மூளையில் நன்றாகவே பதிந்திருந்தது.

மீதியாயிருந்த ஒரேயொரு பேரனையும் தனக்கு முன் இழக்க விரும்பாத கிழவி, இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது என்ற எண்ணத்தில் நம்பிக்கை தளராமல் காத்திருந்தாள்.

தூரத்தே கேட்ட இரைச்சல் சத்தம் விரைவில் பெரிதாக, வெளிச்சம் கண்களைக் கூச வைத்தது. ஒற்றைக் கையால் பொல்லை ஊன்றியபடி, கிழவி கையை காட்டி மறித்தாள்.

முதல் வண்டி கிழவியைக் கடந்து சற்று தள்ளி நிற்க, அடுத்தாக வந்த வண்டிகளிலிருந்து 'பட பட' வென்று பாய்ந்த பூட்ஸ் கால்களின் ஒலி... துப்பாக்கிகளை தயார் செய்யும் ஒலி.......

கிழவி எதிர்பார்த்தது வீண்போகவில்லை. கிழவியைச் சுற்றி ஒரு இராணுவ ஒத்திகையே நடந்தது.

"ஏய்,....என்ன........இந்த நேரம்?" மொழி சொல்லத் தெரியாத இந்திய கூலிப்படைக் கொலைகாரன் ஒருவனின் அதட்டல்.

"தம்பி! நான் பெத்த பிள்ளை மாதிரி, என்ர பேத்தி பிள்ளைப்பெ வுக்காக ஆசுப்பத்திரியில கிடக்குது. அதுக்கு சோறு கொண்டுபோறன். வ வும் போயிட்டுது. நடக்கவும் முடியேல்ல. போற வழியில ஆசுப்பத்திரியில இறக்கிவிடுங்க. உங்களுக்கு கோடி புண்ணியம் கிடைக்கும்......." கிழவி ஒரு போலிக் கும்பிடு போட்டாள்.

அந்த கூலிப்பட்டாளத்துக்கு அவள் கூறியது அரை குறையாக விளங்கித்தான் இருக்கவேண்டும்.

"அந்த பெட்டியில என்ன?"

"என்ர பேத்திக்கு ... பக்கத்தில நாளும் காலை பழுஞ்சிலை ஒண்டும்......"

இராணுவத்தினர் அனைவரும் 'குசு முசு' என்று பேசுகிறார்கள். அவர்களில் ஒரு சிலர் கிழவியின் காதில் தொங்குவதை பார்க்கிறார்கள்.

சில நிமிடங்களில் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்களாக கிழவியை இரண்டாவது வண்டியில் ஏற்றிக்கொண்டார்கள்.

இருபதுக்கும் மேற்பட்ட இராணுவ வெறியர்களைக் கொண்ட அந்த ரக் வண்டியில் இருந்த ஒவ்வொருவரும் கிழவியைப் பார்த்து ஏதோ ஒன்றைச் சொல்லி சிரிக்கிறார்கள். அவர்களுடைய சிரிப்பிலிருந்து அவர்கள் என்ன கதைக்கிறார்கள் என்பது கிழவிக்கு நன்றாகவே விளங்கியது.

"தோடு இரண்டும் இரண்டு பவுன் இருக்கும்" என்றான் ஒருவன்.

"கிடைச்சதுதான் கிடைச்சது, கொஞ்சம் இளசாகக் கிடைச்சிருக்கக் கூடாதா?" என்று குறைபட்டுக் கொண்டான் மற்றவன். அவன் பார்வையே அவனது எண்ணத்தை கிழவிக்கு புரிய வைத்தது.

தொடர்ச்சியாக வந்த ரக் வண்டிகள் அனைத்தும் கிழவி செல்லவேண்டிய பாதையை விட்டு விலகி, வேறு பாதையில் செல்வது கிழவிக்கு நன்றாகவே தெரிந்தது. இருந்தாலும் எதுவுமே தெரியாதது போல் கடகத்திலிருந்த புழுக்கொடியலை எடுத்து அந்த இராணுவ வெறியர்களிடம் நீட்டினாள். அவர்களுக்கு உற்சாகம் கரை கடந்தது. மீண்டும் புழுக்கொடியல் எடுக்கும் சாக்கில் கிழவி அந்த பெட்டியின் சிறு விசையை மின்னல் வேகத்தில் திருப்பி விட்டாள். அந்த வெறியர்கள் நடக்கப் போவதை அறியாமல் ஏதேதோ எண்ணங்களில் மூழ்கியிருந்தார்கள்.

"தம்பிமாரே, ஆசுப்பத்திரிக்கு இன்னும் பத்து நிமிசத்தில போயிடுமா?" கிழவி அங்கலாய்த்தாள்.

"உன்ர பேத்தி நல்ல வடிவா?" தமிழ் தெரிந்த ஒருவன் கேட்டான்.

"என்ர பே...க்கு இன்னும் பத்து நிமிசத்துக்கு... ...ள்ளை பிறந்திடும்" கிழவி ... விளங்காததுபோல.

...ண்டிய இடத்துக்கு இன்னும் ...ஐந்து நிமிடம் எடுக்கும். அதுக்குப் பிறகு நீ இருபது வயதா இருந்திருக்கக் கூடாதா என்று ஏங்கப் போகிறாய்!" கிழவியுடன் சரசமாடினான் இன்னொருவன்.

கிழவிக்கு ஆவேசம் வந்துவிட்டது. 'இப்படி எத்தனை பேர்..... என்ர மகன்கூட இப்படித்தானே....இவங்கள் மாதிரி மிருகங்களெட்ட..... சிங்கள இராணுவம் போக அதையும் மிஞ்சின ஆரியப் படையெல்லோ வந்து நிக்குது'

"நீங்க மனிசங்களில்லையடா.... மிருகங்கள். பெத்த தாய்மாதிரி என்னட்ட....." கிழவி கத்தினாள்.

"நீ பெத்த பிள்ளையள் புலி, நாங்கள் இல்லை"

"அவங்கள் இலட்சியத்திலதான் புலி நீங்கள் பிறவியிலேயே மிருகம். தாம் ரத்தத்தில லாபம் கண்ட சாதி. காந்தியை கழுவேத்த வந்த மிருகப் பிறவியள்" என்று பொரிந்துதள்ளினாள்.

எதிரே இருந்தவனின் துப்பாக்கிப் பிடி கிழவியின் நெஞ்சை பதம் பார்த்தது. கிழவி இயலாமையால் துடித்தாள். அவளது நினைவு மங்கிக்கொண்டு போயிற்று. அந்த நேரத்திலும் தன் இறுதி இலட்சியத்துக்காக ஏங்கிக் கொண்டிருந்தாள்.

அங்கே இருந்தவர்களின் எக்காளச் சிரிப்பு அவள் காதில் அலைமோதிக் கொண்டு இருந்தது. அவர்களுக்கு அது ஒரு இமாலய வெற்றி. அந்த மண்ணின் வீர மைந்தர்களை எதிர்கொள்ள முடியாத கூலிப் படை இதற்குமேல் எந்த வெற்றியையும் காணப்போவதில்லை. என்னைப் போல வயோதிபர்களும், என்

(19ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புரட்சிகர கலை இலக்கியங்கள்.

-யோகா-

கலை இலக்கியம் என்பது இன்றைய எமது புரட்சிகரமான போராட்ட சூழலில் உணர்வு பூர்வமாக வென்றெடுக்கப்படவேண்டிய விடயமாகும். யதார்த்தத்தின் மறுபிறப்பே அது எனவும் மனிதன் தன்னையும் உலகையும் அழகியல் பூர்வமாக அறிய உதவும் சாதனமே கலை எனவும் கலை இலக்கியங்களுக்கு முற்போக்கான விளக்கங்கள் எம் தமிழ்க் கலை உலகில் உருவாகிவரும் இன்றைய சூழலில் இவ்விளக்கங்கள் சமுதாய மட்டத்தில் ஆழமான தாக்கங்களுடன் எழுந்து நிற்கவேண்டுமென்பதே புரட்சிகரமான போராட்ட சூழலில் உணர்வு பூர்வமாக கலை இலக்கியங்களை வென்றெடுக்க வேண்டுமென்பதன் பொருளாகும். ஏனெனில் தேசிய விடுதலையுடன் புரட்சிகரமான சமூக மாற்றங்களையும் நாடிநிற்கும் எம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தனித்து ஆயுதம் தாங்கிய அரசை அமைத்தல் என்பது மட்டும் புரட்சியை பூரணப்படுத்தாது. தனியரசு அமைப்பதன் மூலம் தேசிய அடக்குமுறை ஒழிக்கப்படலாம். ஆனால் சாதிய வர்க்க அடக்கு முறைகளும் அதனோடு வளர்க்கப்படுகின்ற பிற சமுதாய கொடுமைகளும் ஒழிக்கப்பட்டுவிடுமா? என்ற வினாவே சமுதாயப் புரட்சியின் தேவைகளை வலியுறுத்துகின்றது.

இவ்வாறான அடக்குமுறைகளுக்கெதிரான பூரணமான போராட்டத்தில் கலை இலக்கியங்கள் ஆழமான பாத்திரங்கள் வகிக்கின்றன. மனிதன் தனது பிரச்சனைகளை உரியவடிவத்தில் விளங்கிக்கொள்ளவும் அதற்கு எதிராகப் போராடவும் கலை இலக்கியங்கள் வகிக்கும் தாக்குதிறனே இப்பாத்திரத்தை வரையறை செய்கின்றது. ஏனெனில் குறுகிய வட்டத்திலுள் குறுகிய கலை இலக்கிய கொள்கைகளுடன் கூடிவாழும் சமூகம் விரிந்த உலகை நோக்கிப்பார்க்கவும் தமது கரங்களிலுள்ள தீர்மானிக்கும் திறனை அறிந்துணரவும் அவர்களது கலை இலக்கியங்களே தடையாகவும் அமைந்துவிடக்கூடும். உதாரணமாகத் இந்திய கலை இலக்கியங்களில் [illegible] மூட நம்பிக்கைகளை கொண்ட பக்திரச முன்னவையும் ஆளும் வர்க்கநலன் பேணும் வக்கிரம் [illegible] அமைவதும்; அடக்கப்படும் லட்சோபலட்ச பாமரமக்கள் பக்திக்கும் வக்கிரங்களுக்கும் நடுவில் மூழ்கி நிற்கும் நிலையும் கலை இலக்கியங்கள் எத்தகைய ஆயுதம் என்பதையும் புரியவைக்கின்றது. ஆழமாகக் கூறுவதென்றால் மனிதனின் ஆற்றலைக் கட்டிப் போடவும் அல்லது மனிதனின் ஆற்றலை மேம்படுத்தவும் கலை இலக்கியங்கள் பிரதான பங்கை வகிக்கமுடியும்.

இந்தவகையில் கலை இலக்கியங்களின் கொள்கை எதுவாக அமைய வேண்டுமென்பதே இன்று எம்முன் உள்ள முக்கியமான [illegible] பணியாகும். ஆளும் வர்க்க நலன்களைப் பேணும் கலை இலக்கியங்களுடன் — பழமைவாத பிற்போக்குத்தனத்தைப் பேணும் கலை இலக்கியங்களுடன் — புதிதாக வென்றெடுக்கும் முற்போக்கு கலை இலக்கியங்கள் போட்டிபோட வேண்டிய சூழ்நிலையில் கலை இலக்கியங்களின் கொள்கைகளை தீர்மானிக்கும் திறன் கொண்டதாக அமைய வேண்டும். கார்க்கி என்ற ருஸ்ய முற்போக்கு கலைஞன் தனது பார்வையில் "கலை என்பது சார்ந்ததன் அல்லது எதிர்ப்பதன் போர்க்களம்" என வரையறுத்தார். அதாவது கலைக்கு பிரக்ஞை இருக்கவேண்டுமென வலியுறுத்தினார். [illegible] பிரக்ஞை, அரசியல் பிரக்ஞை, பொருளாதார சமூக மேம்பாடு பிரக்ஞை என்பனவே சார்ந்ததன் அல்லது எதிர்ப்பதன் போர்க்களம் என்பதை தீர்மானிக்க வேண்டும்.

நெருப்பு என்றால் கூரையை எரிக்கும் நெருப்புடன் உலை [illegible] க்கும் நெருப்பை சமப்படுத்தல் போல கலை இலக்கியக் கொள்கைகள் இருக்கக்கூடாதென்பதே சார்ந்த

www.tamilarangam.net

தன் அல்லது எதிர்ப்பதன் போர்க்களம் என அவ்வாதம் படம்பிடிக்கின்றது. அதாவது கலைக்கு உணர்வு இருக்க வேண்டும்; கலைக்குபார்வை இருக்க வேண்டும்; கலைக்கு உயிர் இருக்கவேண்டும்.

கலையானது மக்களை பரவசப்படுத்த மக்களை மயக்கத்தில்வைத்திருக்க பயன்படுத்தப்படும் தெய்வீகத்தன்மையான அம்சம் என்றகொள்கை இன்றைய முதலாளித்துவ உலகில் குறிப்பாக ஏகாதிபத்திய "ரம்போ விளையாட்டுக்களில்" கடைப்பிடிக்கப்படுகிறது. வியட்நாம் மக்களின் வீரஎழுச்சியின் முன் நிலை குலைந்த அமரிக்க வல்லரசு தனது தோல்வியை மறைக்க-தனது தோல்வியால் ஏற்பட்ட அமெரிக்க மக்களின் மனசலனத்தை மறைக்க எடுத்துக்கொண்ட ஆயுதம் கூட" மக்களைப் பரவசப்படுத்தும் பிற்போக்குத்தனமான கலை இலக்கியக்கொள்கைகளினூடாகப் பேணப்படும் முதலாளித்துவ சினிமா கலை இலக்கியங்களே ஆகும். அதாவது ஆளும்வர்க்க நலன் பேணும் கலைக் கொள்கை இ இதேகொள்கையை இந்தியகலைஉலகிலும் அவதானிக்க முடிகின்றது. பாமரமக்கள் நிரம்பிய மிகவும் பிற்போக்கான கட்டமைப்பினுள் ஆளும் வர்க்கங்களின் நலன்களுக்காக கலைஇலக்கியங்கள் பயன்படுத்தப்படுவது இந்தியாவில் தெளிவாக அவதானிக்கலாம். ஆண்டான் அடிமை சமூக உறவு, ஆளும்வர்க்கங்களின்சரங்க ஆட்டங்கள், விபச்சார ஒழுக்கக்குறைபாடுகள், பெண்மைத்தனம் என்பன நிரம்பிய மகாபாரதம், இராமாயனம் போன்றகதைகள் இன்றும்கூட பெரும்பான்மை இந்தியாவில் உயிர்வாழ்கின்றது. ஆளும் வர்க்கம் தனதுநலன்களுக்காக இம்முறையினை தொடர்ந்து பேணமுயல்வதும் தொலைக்காட்சியில்-இராமனாக நடித்தவன் இராமன்வேடத்தில் ஆட்சிக்கு வாக்குகேட்பதும் நிகழ்கால சம்பவங்களாகும். இதேபோல் இந்திய சினிமாக்களின் கலை கொள்கை முற்றிலும் பருபயங்கரமான சுரண்டல் நோக்கு கொண்ட வியாபாரமே ஆகும்.

இவற்றில் இருந்து விலகி அடக்கப்படும் மக்களின் கைகளில்கலைஇலக்கியங்கள் ஒப்படைக்கப்படுவதேபுரட்சிகரமான கலைக்கொள்கைக்குரிய நிபந்தனை எனலாம். சமூகத்திலிருந்து தீப்பற்றி எரியும் பிரச்சனைகளை ஒவ்வொரு தனிமனிதனும் புரிந்துகொள்வதற்கு ஏற்ற இதயமே கலைக்கருவூலங்கள் என்ற நிலைப்பாடு உருவாக்கப்படவேண்டும்.

இந்த தளத்தில் நின்று தமிழீழ தெசிய விடுதலைஎனும் இயக்கத்துடன் கலைஇலக்கியப் புரட்சி இயங்கவேண்டும். இக்கலை இலக்கியப்புரட்சியானது ஒவ்வொரு அம்சத்துக்கும் சரியான, முற்போக்கான, பரிமானம் கொடுக்கபடவேண்டும். கலை எனும் சாரனமுடாக- எம்மை நாம் பார்க்கும் போது எமக்குள் உருவாகும் ஆக்ரோசம் அர்த்தபுஸ்டி உள்ளதாக அமைய வேண்டும். எம்மண்ணின் மணம் கமழும் கலை இலக்கியங்களும் அதனோடு இணைந்த முற்போக்கான சர்வதேச கலை இலக்கியங்களும் தமிழீழ சமூகத்தினுள் ஒரு ஆக்கபூர்வமாக வளர்ச்சிக்கு வழிதிறக்கவல்ல கலை கொள்கையாக அமையவேண்டும்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவும் சர்வதேச ரீதியான நெருக்குதலைக் கொடுத்து புதியநாட்டைச் சட்டபூர்வமாக அமைக்கும் முயற்சியினை ஐக்கிய நாடுகள் நபையின் அனுசரணையுடன்மேற்கொண்டு வருகிறது. பலஸ்தீனப்பிரச்சினையின் நிரந்தரத் தீர்வுக்கும் மத்திய கிழக்கின் அமைதிக்கும் தேவையான சர்வதேச மகாநாட்டை ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையில் கூட்டி பலஸ்தீன விடுதலைக்குவழி வகுப்பதில் ஆக்கிரமிக்கப்பட்டபிரதேசத்து மக்களின் எழுச்சியே அடித்தளம் என்பதனை மறுத்தல்முடியாது. மக்கள் சக்தியினால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. திலீபன் தனது மரணத்தின் மூலம் தமிழீழத்தில் சாதிக்க முனைந்ததும், கண்டகனவும் இது தான்.

மக்கள் போராட்டம் மலரட்டும்!

"சொல்லாத சேதிகள்" சொல்லும் செய்திகள்.

இன்றைய எமது பெண்கள் சமூகத்தில் தமது உண்மையான நிலைப்பாட்டை உணர்ந்து வருகின்றனர். மகளிர் அமைப்புக்கள் போன்றவற்றின் மூலம் தமது உரிமைக்காக குரலெழுப்புவதுடன் மூடச்சம்பிரதாயங்கள் சிலவற்றை உடைத்தும் அகிம்சைவழிகளிலும் ஆயுதமுனைகளிலும் தேசத்தின் உரிமையையும் மீட்டெடுக்க ஆணுடன் பெண் சரிசமமாக நின்று தமது பங்களிப்பைச் செலுத்திக் கொண்டிருக்கின்றனர்.

மேலும் படைப்பில [illegible]ம் பெண்களது கருத்துக்கள், உணர்வுகள், ஆற்றல்களை வெளிப்படுத்தவும் பெண்களே களம் அமைக்கத்தொடங்கியுள்ளது பாராட்டப்பட வேண்டிய விடயமாகிறது.

இந்தவகையில் "பெண்கள் ஆய்வு வட்டம்" (யாழ்ப்பாணம்) "சொல்லாத சேதிகள்" என்ற தலைப்பில் பத்து பெண்கவிஞர்களின் கவிதைகளை வெளியிட்டுள்ளது. மௌ. சித்திரலேகாவின் அறிமுகஉரையுடன் வெளிவந்துள்ள இந்தக்கவிதைத்தொகுப்பு எதிர்காலத்தில் ஈழத்துஇலக்கிய வளர்ச்சியில் தரமான பல பெண்கவிஞர்களை அறிமுகப்படுத்தியிருக்கின்றது.

உதாரணத்திற்கு,

அவர்கள் பார்வையில்

எனக்கு –
முகம் இல்லை
இதயம் இல்லை
ஆத்மாவும் இல்லை.

அவர்களின் பார்வையில் –
இரண்டுமார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை
இவைகளே உள்ளன.

சமையல் செய்தல்
படுக்கை விரித்தல்
குழந்தை பெறுதல்
பணிந்து நடத்தல்
இவையே எனது கடமைகள்
–ஆகும்.

–கற்பு பற்றியும்
மழை பெய்யெனப் பெய்வது
–பற்றியும்
கதைக்கும்
அவர்கள்
எப்போதும் எனது உடலையே
நோக்குவர்.

கணவன்தொடக்கம்
கடைக்காரன்வரைக்கும்
இதுவே வழக்கம்.

*அ. சங்கரி

பல வழிகளிலும் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஈழத்துத் தமிழினம் முழுவதும் சுதந்திரப்போராட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் இலக்கியப் படைப்புகளும் சுதந்திரப்போராட்டத்தை நோக்கி நகர்த்தப்படுவது போராட்டத்தின் காத்திரமான வளர்ச்சியையே குறிக்கின்றது.

(16ம்பக்கத் தொடர்ச்சி.:)
[illegible]ளை, மருமகளைப்போன்ற பெண்களும், குழந்தைகளும்தான் இவர்களுக்கு கிடைக்கும் இரை. என்னைப்போல் எல்லோரும்............' கிழவியின் நினைவு தடுமாறும் நேரம்....

அந்த ரக் வண்டி சிதறி, மேலெழுந்தது. பின்னால் வந்த இரு வண்டிகள் நிலை தடுமாறி தடம் புரண்[illegible]. நாற்பதுக்கும் மேற்பட்ட கூலிப்[illegible]டையினர் கொல்லப்பட்டனர்.

www.tamilarangam.net

நிரைமீட்பு

ஏரிமூதிரா இளநாம்பன்
கன்றுகள்
ஏரி நிமிரா இளம் நாம்பன் கன்றுகள்
ஊர் நிமிர
நானே உழைக்க வளர்த்து எடுத்த
ஏரி நிமிரா இளநாம்பன் கன்றுகள்
பாராமுகமாய் இருக்க முடிஞ்சிடுமே!

வேலி பிரிச்சு
அவற்றை வெளியாலே கொண்டுபோய்
காலித்தனம் பண்ணக் கண்டும்
பொறுக்கிறதே!

நாளுக்கு நாளாக
நாற்பது ஐம்பதுவாய்
ஆளுக்காளாய் வந்து
கொன்டெல்லே போறுங்கள்.
பச்சை உயிராகப் பார்த்திருக்க
கொண்டுபோய்ப்
பிச்சுப்
பிடுங்கி உயிரும் எடுத்து......

''விடுகாலி நாம்பன் கதையை
விடுங்கோ'' வாம்!
''பயிரழிவு'' என்று
பழிசுமத்திப் போட்டவங்கள்
உயிரழிவும் செய்தெல்லே
ஊருலகைப் பேய்க்காட்டி
நீதிக்குச்
சீலை உரிஞ்சு பறிச்செடுத்து
வீதியெல்லாம்
நிர்வாண வேடிக்கை செய்யிறதைப்
பார்த்து
நெடுகப்பெருமூச்சு விட்டென்ன?

'ஊர்த்துளவாரம் எமக்கேன்?'
என இருந்தால்!
எல்லாரும் ஏன்
சும்மா ஏங்கிப் போய் நிற்கிறியள்?
பல்லைக்கடிச்சு
நெருடி அவன் பார்த்தால்--
உண்மைகளைக் கட்டி ஒழிச்சால்
முடிஞ்சிடுமே!

மாட்டைப் பிடிச்சவங்கள்
வீட்டைப் பிடிக்க
மணிக்கணக்கே செல்லும்?
எழும்புங்கோ வன் கெதியாய்.

கல்வயல் குமாரசாமி

(11ம் பக்கத் தொடர்ச்சி)

ஒண்ணிக் குழி வெட்டி
இடுப்பொடிஞ்சி நிக்கையிலே
வெட்டு வெட்டு ஙகிறுனே
வேலையத்த கங்காணி...

"அஞ்சு மணியாச்சு
ஐயா வர நேரமாச்சு
கொஞ்சி விளையாடாதீங்க
கோளுக்காரன் கங்காணி.."

எனத் தோட்டத்துக் கங்காணியை பற்றிப் பாடும்போது, பாடியுள்ளதை நோக்கும்போது அவர்கள் இந்த மனிதக் கூலிகளை எப்படியெல்லாம் வதைத்துத் துன்பப்படுத்திக்கொத்தடிமைகளாக்கியிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளமுடிகின்றது.

இன்றைய நாட்களில், அவர்களது பன்னிரண்டு மணித்தியால வேலைநேரம் எட்டு மணித்தியாலமாகக் குறைக்கப்பட்டதும் சற்றுக்கூடுதலான சம்பள உயர்வையும் சிறிய அளவிலான கல்வி வசதியையும் தவிர இந்தத் தோட்டத்தொழிலாளர்கள் வேறு என்னசந்தோசத்தை அடைந்தனர்?

எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்கின்ற ஜனநாயக சிறிலங்காவே! உண்மையில் இந்நாட்டின் மன்னர்களான உழைக்கும் தொழிலாளர்களை இன்னும் ஏன் சுரண்டுகின்றாய்?

*   *   *

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிள்ளைகள் சுமந்து தாலாட்டுப்பாடி
மீண்டும்
பச்சை விறகு கரியடுப்பு . . . .
புகை கண்ணீர்
இந்த
மைய வட்டத்தை விட்டு
நான் பூட்டிக் கொண்டு
ஒரு ஷெத்திரம் போகும்
இவர்கள் . . . .
சாத்வீகப் பாதையில்
பூபதி அம்மாக்களாய் . . .
ஆயுதம் ஏந்திய
சபரிகள் . . . இமல்டாக்களாய் . . . .

தொடர்ந்து செல்லும்
இலட்சிய பாதையில்
இவர்கள்
இன்னும் . . . இன்னும் . . .

வைகறைப் பொழுது
புலர்வுக்கு வருகிறது.

- கஜன் -

www.tamilarangam.net

தமிழீழ மண்ணில் பெண் போராளிகள்...